DINAMALAR

14 JULY 2022

PAGE 2

# காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியேற்பு

**புதுச்சேரி, ஜூலை 14–**

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், காந்தி கிராம பல்கலைக்கழக துணை வேந்தராக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங்கிற்கு, கூடுதல் பொறுப்பாக, தமிழ்நாடு காந்தி கிராம நிகர்நிலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் பதவி கடந்த 10ம் தேதி மத்திய கல்வி அமைச்சகம் மூலம் வழங்கப்பட்டது.

இதையடுத்து, தமிழ்நாடு திண்டுக்கல் காந்தி கிராம நிகர்நிலை பல்கலைக்கழக துணை வேந்தராக, குர்மீத் சிங், நேற்று பதவியேற்றுக் கொண்டார். பல்கலைக்கழக டீன்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங், கூடுதல் பொறுப்பாக, திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக்கழக துணை வேந்தராக பதவியேற்றார்.

DINAKARAN

14 JULY 2022

PAGE 14

காந்தி கிராம பல்கலையில்

# துணை வேந்தராக குர்மீத் சிங் பொறுப்பேற்பு



▶ புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் நேற்று காந்தி கிராமநிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கூடுதல் பொறுப்பை ஏற்றார்.

**புதுச்சேரி, ஜூலை 14:** திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராமத்தில் உள்ள காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியிலிருந்து மாதேஸ்வரன் விலகினார். இதையடுத்து, பொறுப்பு துணைவேந்தராக ரங்கநாதன் நியமிக்கப்பட்டு பணியாற்றி வந்தார். இந்நிலையில் கடந்த 9ம் தேதி அவர் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, புதுவை பல்கலைக்கழக துணைவேந்தரான குர்மீத் சிங்கிற்கு கூடுதல் பொறுப்பாக காந்தி கிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியை மத்திய அரசு வழங்கியது.

இதைத் தொடர்ந்து, புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் நேற்று காந்தி கிராம நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கூடுதல் பொறுப்பை ஏற்றார். பிறகு அனைத்து புலமுதன்மையர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடம் உரையாற்றினார். அப்போது, மற்ற நிறுவனங்களுடன் கூட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் நிறுவனத்தின் மேம்பாட்டிற்கான திட்டங்களை மேற்கொள்ளுமாறு துணைவேந்தர் குர்மீத் சிங் அறிவுறுத்தினார்.